# மலர்களின் பயன்பாடுகள்

***ச.மெய்யரசன்***
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783569

***ஆய்வுச்சுருக்கம்***

*இயற்கையின் கொடையாகக் கருதப்படுவது மலர்கள் ஆகும். பூக்கள் அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை மனிதர்களின் வாழ்வில் எல்லா நிலைகளிலும் இரண்டாக கலந்து விளங்குகிறது. இந்த மலர்களில் வெறும் வாசனைக்காக மட்டும் சில மலர்கள் மருத்துவத்திற்குச் சில பயன்படுகிறது. நம்மை காக்கும் தெய்வத்திற்கு நாள்தோறும் மாலையாக மலர்களையே அணிவிக்கின்றனர். இதனை நோக்கும் போது பூக்கள் மிகவும் அவசியமானதாகவே உள்ளது. மனிதனுடைய பிறப்பிலிருந்து இறப்பு வரை பூக்கள் பல்வேறு காலகட்டத்திலும் பயன்படுகின்றது. காலை, உச்சி, மாலை, இரவு என ஓரு நாளில் பல காலங்களில் சாத்தும் மலர்கள் உள்ளன என்பதை இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

*தாவர இனங்கள் பூவுள்ள தாவரம் பூவில்லாத் தாவரம் என இரு வகைப்படும். பூக்கும் தாவரங்கள் பூக்கும் நிலையில் நின்று விடாமல் காய்த்து கனி கொடுப்பவை மனம் என்பது பூக்களுக்கே உரித்தான முக்கிய தன்மையாகும்.*

*பூக்களில் எந்தெந்த பூக்கள் மருத்துவ குணம் உடைய பூக்கள் என்றும் எந்த நோய்களுக்கு இப்பூக்கள் பயன்படும் போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.*

*மலர் பூவினுடைய பல்வேறு வாழ்வியல் பயன்களைக் கருதி பண்டைய தமிழர்கள் மலர் செடிகளை வளர்த்தனர்.*

*தாழிகளில் மலர்ச்செடி கொடிகள் வளர்க்கக்கூடிய வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. மலர் கொய்தல், மலர்மாலை தொடுத்தல், மலர் விற்றல், வாசனை திரவியங்கள் போன்ற பல கலைகள் மலர் சார்ந்து இருக்கின்றன. பூக்கள் இறை வழிபாட்டில் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். மருத்துவ குணம் உள்ள பூக்கள் ஆயுர் வேதத்திலும் சித்த மருத்துவத்திலும் பலவாகக் கூறப்பட்டுள்ளன.*

**மலர் கொய்தல்**

*பூக்கள் மரம், செடி, கொடி, பூத்துக் குலுங்குவதுடன் முற்றுப்பெற்று விடுவதில்லை. மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் பெரிதும் பொருந்தி இருக்கின்றது.*

*நீர்ப்பூவான நெய்தல், குவளை போன்ற மலர்களைத் தழையாடையாகவும் அரும்பு, முல்லை போன்ற மலர்களைத் தலையின் சூடுவதற்காகவும் சிலர் விற்பனை செய்வதற்காகவும் பறிக்கின்றனர். சிறுமிகள் மலர் பறித்து கடற்கரையில் பொம்மை செய்து விளையாடும் காட்சியை,*

***"சிறுவி நாடில் தேன் நோய் ஒள்ளிணர்***
***நேரிழை மகளிர் வார் மணல் இழைத்த***
***வண்டற் பாவை வன முலை மற்றத்து***
***ஒண் பொறிச் சுணங்கின் ஐது படத் தாஅம்"***

***- (நற்.191)***

*என நற்றினை பாடல் கூறுகின்றது.*

***தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை***
***மலைமார் இடுஉம் எம்ப் பூசல்'***

*என்பதை, அப்பூசல் கேட்டு வேங்கை மரம் சாய்ந்து இருக்கும் மகளிர் எளிதாக அதில் உள்ள பூக்களைப் பறித்துக் கொள்வர்.*

**மலர் விற்றல்**

> ***"துய்தலை இதழ பைங்கருக் கத்திப்பொடு***
> ***பித்திகை விரவு மலர் கொள்ளீரோ என***
> ***வண்டு சூழ் வட்டியன் திரிதரும்***
> ***தண்டலை உழவர் தனி மடமகள்"***
>
> ***- (நற்.97)***

*என்ற பாடல் வரி குன்றத்தில் வாழக்கூடிய குறமகள் வேங்கை பூவினை பறித்துச் செல்கின்றாள் என்பதை கூறுகிறது.*

*தாமரை, ஆம்பல், பித்திகம், குருத்து போன்ற மலர்களை வட்டியில் வைத்து விற்பனை செய்வதையும், சிலர் பூக்களை மாலைகளாகத் தொடுத்தும் விற்பதற்கு எடுத்துச் செல்வர் என்பதையும் காண முடிகிறது.*

*உழவர் இளமகள் ஒருத்தி பூக்கூடையோடு வீதியில் பூ விற்கும் காட்சியை இப்பாடல் காட்சிப்படுத்துகிறது.*

**மலர் அணிகள்**

*பெண்கள் காதிற்கு குழையாகவும் கைக்கு வளையலாகவும் தங்களை அழகு செய்து கொள்ள மலர்களைப் பயன் படுத்துகின்றனர். பார்ப்பன பெண்கள் காட்டில் உள்ள முல்லையின் இதழ் விரித்த பூக்களை சூடி மகிழ்ந்தனர் என்பதை,*

> ***"கான முல்லை கயவாய் அலரி***
> ***பார்ப்பன மகளிர் கார் புறத்தணிய"***
>
> ***- (நற்.321)***

*என்ற வரி உணர்த்துகின்றன.*

> ***"சிறுவீ முல்லைத் தண்கமழ் அலரி***
> ***தானும் சூட்டினன் இளையரும் மலைத்தனர்"***
>
> ***- (நற்.361)***

*என்பதில் ஆடவரும் தங்களின் ஒப்பனைக்காக பூச்சூடி மகிழ்ந்தனர் என்பதை இதன் வழி அறியலாம்.*

*அழகிய புதிய குவளை மலரை காதில் குழையாக அணிந்துள்ள காட்சியை,*

> ***"குவளைக் குழைக்காதின் கோலச் செல்லின்***
> ***இவள் செர்இ நான்கு விழி படைத்தான்"***
>
> ***- (பரி.11)***

*என்ற பரிபாடலடி காட்சிப்படுத்துகின்றன.*

**காலையில் அணிவிக்கும் பூக்கள்**

*மல்லிகை, எருக்கு, தளவம், தாமரை, அலரி ஆகியவை காலையில் பூசனைக்கு சிறந்த பூக்கள் ஆகும். அதிலும் நந்தியாவர்த்தம் மிகச்சிறந்தது ஆகும்.*

**உச்சியில் அணிவிக்கும் பூக்கள்**

*பொண்ணுமத்தை புலிநகக் கொன்றை, வெள்ளை, பாதிரி, மந்தாரை, கொன்றை, தும்பை ஆகியவை நண்பகல் பூசணிக்கு உகந்தவை ஆகும்.*

**மாலையில் அணிவிக்கும் பூக்கள்**

*மல்லிகை, முல்லை, செண்பகம், தொழந்து, சிறுசெண்பகம் ஆகியவை மாலை பூசனைக்கு உகந்தவையாகும்.*

**ஏனைய காலங்களில் அணிவிக்கும் பூக்கள்**

*புன்னைவெள்ளெருக்கு, சென்பகம்பாதிரி, அலறி, செந்தாமரை ஆகியவை பொதுவாக எல்லா காலத்திலும் பூசனைக்கு உரியவை ஆகும்.*

**பூக்களின் மருத்துவ பயன்கள்**

*மருத்துவப் பயனுடைய பூக்கள் ஆயுர்வேதத்திலும் சித்த மருத்துவத்திலும் பலவாக காணப்படுகின்றன. பூக்கள் கண்ணுக்கு கருத்து தரும் விருந்தளிப்பதோடு உடலுக்கும் உறுதி அளிப்பவையாகும். உடலுக்கு வலிமை ஊட்டுவதின் மூலம் உயிரை பாதுகாப்பாகவை ஆகும்.*

**ஆம்பல்**

*ஆம்பல் மருத்துவ குணம் கொண்டதாகும். இது உடல் சூடு, நீரழிவு, சிறுநீர் எரிச்சல் மற்றும் கண் நோய்க்கு சிறந்த மருந்தாக பயன்படுவது தெரிய வருகிறது.*

**ஆவிரை**

*ஆவாரைப் பூத்திருக்க சாவாரை கண்டதுண்டோர் என்ற பழமொழியினை அறியலாம். ஆவாரம்*

பூ உயிர் காக்கும் மருந்தாகும். மூலநோய் உள்ளவர்கள் இந்தப் பூவை சுத்தம் செய்து வெயிலில் உலர்த்தி இதனுடன் அருகம்புல் வேரையும் சேர்த்து இடித்துப் பொடி செய்து சிறிது நெய்யுடன் கலந்து நாள்தோறும் சாப்பிட்டால் உள் மூலமும், வெளி மூலமும் குணமடையும் என இரா.பூபதி குறிப்பிடுகின்றார்.

**கருவிளை**

கருவிளையின் இலை, வேர் மற்றும் விதை, முதலியவை மருத்துவ குணம் கொண்டவை இது வாந்தி பேதி தும்மல் ஆகியவற்றை குணப்படுத்தும்.

**பூளைப்பூ**

பூளைப் பூ நிறைய மருத்துவப் பயன்களைக் கொண்டதாகும். இதன் வேரை காய வைத்து தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலையில் தடவி வர முடி வலுவடைந்து கொட்டுவது நின்று விடும்.

**பாதிரி**

பாதிரியின் வேர், காய், பூ ஆகியவை மருத்துவப் பயன் நிறைந்தவை. பாதரின் மலர்ந்த பூவை சிறிது நேரம் மண்பானையில் போட்டுப் பின்னர் அதில் குடிநீரை ஊற்றி வைத்தால் நீர் சுவையாக இருக்கும்.

**முல்லை**

முல்லைப்பூ மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. முல்லைப் பூவை தலையில் சூடிக்கொண்டு அதன் மனத்தை முகர்ந்தாலே, மன வியாதிகள் நீங்கி, மனத் தெளிவு உண்டாகும். இந்த பூவின் சாறைப் பிழிந்து மூக்கில் விட தலைவலி போகும். இந்த சாந்தை மூன்று துளிகள் கண்களில் விட்டு வர கண் பார்வை குறைபாடு நீங்கும்.

**தாமரை**

செந்தாமரை, வெண் தாமரை ஆகிய இருவகை தாமரை மலர்களில், வெண்தாமரையே அதிக அளவில் மருத்துவத்திற்கு பயன்படுகிறது. தாமரைப்பூ, அதிமதுரம், நெல்லிக்காய், மருதாணி இலை ஆகியவற்றை சம அளவு எடுத்து பால்விட்டு அரைத்து, ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி வைத்து வடித்து, தைலத்தை தினமும் தலையில் பூசி வர இளநரை மறையும், கூந்தல் உதிர்வது நின்றுவிடும். நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ தாமரைப் பூ மருந்தாகப் பயன்படுகிறது. வெண்தாமரை மற்றும் செந்தாமரை இரண்டு மூளைக்கும் நன்மை உண்டாக்கும்.

**நொச்சி**

நொச்சி மரத்திலிருந்து கிடைக்கும் பூ. இதனின் இலை மருத்துவக் குணம் உடையவை. நொச்சி பூவை நிழலில் உலர்த்தி, இடித்துப் பொடி செய்து, சலித்து எடுத்து, பன்னீர், பனங்கற்கண்டு சேர்த்து சிறிதளவு அருந்துவதால் ரத்த பேதி குறையும்.

இவ்வாறு பூக்கள் மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளன.

**முடிவுரை**

பூக்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் எந்தெந்த இடங்களில் பயன்களை பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஐந்திணை பெயர்களும் புறத்திணைகளின் துறைகளும் பூக்கள் பெயரிலே இடம் பெற்றுள்ளன. இத்தகைய பூக்களின் பயன்பாட்டை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. சுப்பிரமணியன் ச.வே.,- சங்க இலக்கியம் எட்டுத்தொகை (தொகுதி 3) புறநானூறு மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, முதற்பதிப்பு - 21 சூன் 2010.

2. நாகராஜன்.வி.முனைவர் (உ.ஆ)- சங்க இலக்கியம் பத்துப்பாட்டு நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
3. பூபதி.இரா- மலர்களும்மருத்துவபயன்களும் காளிஸ்வரி பதிப்பகம், 2, வடக்கு உஸ்மான் சாலை, முதல்மாடி, தி.நகர்,
4. சென்னை - 600 017. முதற்பதிப்பு - 2010.